**//மிக மிக அவசரம் //**

**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க. எண். 601 /அ1/ஒபக/2021** **நாள் : 09.09.2021**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – PFMS – Zero Balance –ல் கனரா வங்கியில் கணக்கு துவங்க அறிவுரை வழங்குதல் –சார்பு.

**பார்வை :** சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.1702/F1/SS/2021, நாள்.06.09.2021.

*********

பார்வையில் காணும் மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்படி கடித நகலில் அனைத்து அரசு மேல்நிலை/உயர்நிலை/ நடுநிலை/தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கனரா வங்கியில் Zero Balance –ல் Joint Account கணக்கு துவங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கடித நகலில் தெரிவித்துள்ளவாறு அனைத்து தலைமையாசிரியர்களும் **18.09.2021–**க்குள் தங்கள் பள்ளிக்கு அருகாமையில் உள்ள கனரா வங்கியில் Zero Balance –ல் கணக்கு துவங்கிடவும், கணக்குத் துவங்கிய விவரத்தையும், கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகலையும் வேலூர் மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பிடவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கணக்கு துவங்குவது சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களும், வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர் பயிற்றுநர்களும், கிராமக் கல்விக் குழு கணக்காளரும் கணக்கு துவங்கப்பட்ட விவரத்தினை மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு அனுப்பிவைக்க ஏதுவாக தினந்தோறும் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு மாலை **5** மணிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதில் ஏற்படும் காலதாமதத்திற்கு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் பொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**ஓம்.XXXXXX**
**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

இணைப்பு – கடித நகல்.

**பெறுநர் –** அனைத்து அரசு மேல்நிலை/உயர்நிலை/நடுநிலை/தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.

**நகல் –** மேற்பார்வையாளர்கள் (பொ) , வேலூர் மாவட்டம்.
**நகல் –** வட்டாராக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
**நகல் –** மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.
**நகல் –** முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர்/இராணிப்பேட்டை/திருப்பத்தூர்.
– அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
**நகல்** – மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக), சென்னை–6
– அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.